www.tamilarangam.net

Mon, May 24, 2010







# ஒஸ்லோ 'பிரகடனத்தை' புலிகள் ஏற்றார்களா? இல்லையா? ப

தாமரை காருண்யன்



ஈழம் தோல்வி கண்டதா? தோற்கடிக்கப்பட்டதா? - பகுதி 10

கடந்த அங்கத்தில் தமிழீழ சிறிலங்கா தேசங்களுக்கிடையே எழுந்த முரண்பாடுகளுக்கும் புலிசார் அரசியலுக்குமிடையேயிருந்த தொடர்புகள் பற்றி நோக்கியிருந்தோம்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் தொடர்புபட்ட இப் புலிசார் அம்சங்கள் பற்றி நாம் மேலும் பேச வேண்டியுள்ளது.

இருந்த போதும் தற்போதய காலகட்டத்து விவாதம் ஒன்று நம் கவனத்தை ஈர்த்ததால் இவ் அங்கம் ச அங்கத்தின் தொடர்ச்சியாக இல்லாது ஒரு சிறப்பு அங்கமாக எழுதப்படுகிறது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற தேசியக் கூட்டடைப்பு, தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி ஆகிய அமைப்புக்களிடையே எழு ஒன்று நம் கவனத்தை ஈர்த்தது.

சிறிலங்கா அரசாலும் விடுதலைப் புலிகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒஸ்லோ 'பிரகடனத்தை' அடிப்படையாக வைத்தே தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு முன் வைக்கும் தீர்வுத் திட்டம் அமையும் என கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர் தெரிவித்திருந்தார்.

ஒஸ்லோ 'பிரகடனம்' புலிகளால் எற்றுக் கொள்ளப்படவில்லை என தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி தனது எதிர் வாதத்தை முன்வைத்தது.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசனுக்கு இறுதி மரியாதை செய்யச் சென்றிருந்த வேல கூட்டமைப்புச் செயலர் மாவை சேனாதிராஜா விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனுடன் ஒரு சந்த மேற்கொண்டதாகவும் இச் சந்திப்பில் பிரபாகரன் இதனை மாவைக்குத் தெரிவித்திருந்ததாகவும் தமி தேசியத்திற்கான மக்கள் முன்னணி கூறுகிறது.

இத் தகவலை மாவையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கூட்டத்தில் தெரிவித்ததாகவும் தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி மேலும் தெரிவிக்கிறது.

உண்மையில் நடந்தது என்ன? ஒஸ்லோ 'பிரகடனத்தை' விடுதலைப்புலிகள் ஏற்றுக் கொண்டார்களா இல்லையா?

இதனைத்தான் இச் சிறப்பு அங்கம் தனது கவனத்திற்கு எடுக்கிறது.